



## நெய்தல் நிலத்தின் பெருந்தலைவர்

# தீவுக்கவி யு. அருளானந்தம்

# தீவுக்கவி. யு. அருளானந்தம்



## தீவுக்கவி. யு. அருளானந்தம்



பிறப்பு:11-11-1947 மறைவு:10-10-2021

- மீனவர் நலன் ஒன்றே தனது முழு நேரப் பணியாகவும், உயிர்மூச்சாகவும் கொண்டவர்.
- மீனவர்களுக்கு நெருக்கடிகள் வரும்போதெல்லாம் அரணாயிருந்து மீனவர்களின் வாழ்வையும், வளத்தையும் பாதுகாப்பதற்காகத் தன்னார்வத்துடன் போராடிக் கொண்டிருந்தவர்தான் திரு.அருளானந்தம் அவர்கள்.
- பிழைப்புத்தேடி கடலுக்குபோகும் மீனவர்கள் உயிருடன் கரைக்குத் திரும்புவதை உத்தரவாதப்படுத்துவதை பெரும் பணியாகவும், பொறுப்பாகவும் எடுத்துக் கொண்டவர்.
- மீனவர்கள் ஒருகாலத்தில் பாக் வடகடல் பகுதியிலும், மன்னார் வளைகுடா தென்கடல் பகுதியிலும், தனுஷ்கோடி முதல் கோடியக்கரை வரையிலும், தலைமன்னார் தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலும், பாம்பன் துவங்கி தூத்துக்குடி வரையிலும், தலைமன்னார் துவங்கி நீர்க்கொழும்பு வரையிலுமாக சுதந்திரக் கடல் பறவைகளாக தமிழக மீனவர்களும், இலங்கை

மீனவர்களும் தடைகள் ஏதுமின்றி மீன்பிடித்து வருமானம் ஈட்டி சகோதரத்துவத்துடன் வந்தவர்கள் இன்று இந்த நிலைமாறி "எல்லை மீறல்" என்ற குற்றச்சாட்டுடன் காக்கை குருவிகளாய் சுட்டுக் கொல்லப்படுவதும், இலங்கை கடற்படையின் ரோந்து கப்பல்கள் மீனவர்களின் விசைப்படகுகள் மீது மோதி மீனவர்களை சாகடிப்பதும், கொடூரமாகத் தாக்கப்பட்டு சிறையிலடைத்து சித்திரவதை செய்யப்படுவதும் என கடற்படையினரின் வரலாற்றுக் கொடூரங்கள் தொடர்கின்றன. அதற்கு எதிராக போராடி வந்தவர்தான் திரு.அருளானந்தம் அவர்கள்.

- தமிழக மீனவர்களுக்காக மட்டுமன்றி எல்லை கடந்து வந்ததாகக் கூறி இந்திய கடற்படையினரால் கைது செய்யப்படும் இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்காகவும் சட்டரீதியாக போராடுகின்ற வகையில் 1987ஆம் ஆண்டு முதல் நிரபராதி மீனவர்களின் விடுதலைக்கான கூட்டமைப்பு (ARIF) என்னும் அறக்கட்டளை ஒன்றை தொடங்கி தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதற்கும், தாக்கப்படுவதற்கும் எதிராகத் தீவிரமாய்ச் செயல்பட்டவர்.
- தமிழக மீனவர்களுக்கு மட்டுமின்றி இலங்கை மீனவர்களுக்கும், மனிதாபிமானமிக்கவராகவும், இழந்த வாழ்வையும், உரிமையையும் மீட்டுத் தருகிற நம்பிக்கை நட்சத்திரமாகவும் ஜொலித்தவர் திரு.அருளானந்தம் அவர்கள்.

## வாழ்க்கை

- 1947ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் நாளன்று திரு.அருளானந்தம் அவர்கள் திரு. யுவானி பெர்னான்டோ - மிக்கேல் அம்மாள் தம்பதியருக்கு ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். இவர் 5ஆம் வகுப்புவரை மட்டுமே படித்தவர்.
- மூக்கையூர் செயின்ட் ஜேம்ஸ் துவக்கப்பள்ளி, தங்கச்சிமடம் திரேசாள் கான்வென்ட் மற்றும் மீனவர் சமூகத்தின் மரத்தடி பள்ளிக்கூடங்கள்தான் இவரது பள்ளிக்கூடம்.
- 1970ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் நாள் திருமதி.தார்தீஸ் அவர்களை மணம் முடித்தார். இவரது பொதுவாழ்விற்கு மிகவும் உற்ற துணையாக இருந்து செயல்பட்டவர்.

## மீனவர் சமுதாயத்திற்கான பள்ளி

- 1979ஆம் ஆண்டில் புனித யாகப்பா பள்ளி மீனவர் சமுதாயத்திற்காக தங்கச்சிமடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- இப்பள்ளியில் மீனவர் சமுகத்தினரின் பிள்ளைகளுடன் பிற சமூகத்தினரின் பிள்ளைகளும் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- 1990ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை இப்பள்ளியின் தாளாளராக இவர் பொறுப்பேற்று பள்ளியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார் என்பது பெருமைக்குரியது.

## மீனவர் சங்கப் பணி

- அனைத்து மீனவர்களையும் ஒன்றுதிரட்டி "தீவு மீனவர் சங்கம்" என்ற பெயரில் மீனவர் அமைப்பை உருவாக்கினார்.
- இச்சங்கமானது அருளானந்தம் அவர்கள் பெயரிலேயே பதிவு செய்யவேண்டும் என்று மீனவர்கள் கேட்டுக் கொண்டதால் அவரது பெயரிலேயே 81/80 என்ற பதிவு எண்ணில் பதிவு செய்யப்பட்டது. இச்சங்கத்திற்கு காலியிடம் ஒன்றை வாடகைக்கு பெற்று குடிசையமைத்து புதிய அலுவலகம் 01.02.1981-ல் தொடங்கினார்.

## சிங்காரவேலர் மீனவர் பேரவை தொடக்கம்

திரு.அருளானந்தம் அவர்கள் 1990ஆம் ஆண்டு சிங்காரவேலர் மீனவர் பேரவையை தொடங்கினார். சிங்காரவேலர் மீனவர் பேரவையின் முதல் மாநாட்டை தொண்டியில் 1992ஆம் ஆண்டு தனது தலைமையில் நடத்தி பல்வேறு மீனவர் அமைப்புகளின் தலைவர்கள், அதிகாரிகளையும் கலந்துகொள்ளச் செய்து மீனவர்கள் மத்தியில் எழுச்சியை உருவாக்கினார்.

## மீனவர் வாழ்வுரிமை மாநாடு

- தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் சிங்கள அரசைக் கண்டித்தும் மீனவர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டவும் மீனவர் உரிமைக் கூட்டமைப்பானது 2008 நவம்பர் 21 அன்று நாகர்கோவிலில் முதல் மாநில மாநாட்டை நடத்தியது அந்த மாநாட்டிலும், அதன்பின்பு

- 2009 டிசம்பர் 11ஆம் தேதி தங்கச்சிமடத்தில் நடந்த மீனவர் வாழ்வுரிமை மாநாட்டிலும்,
- 2010 டிசம்பர் 10ஆம்தேதி திருசெந்தூர் வீரபாண்டியன் பட்டினம் மாநாட்டிலும்,
- 2013 நவம்பர் 22 மதுரையில் நடைபெற்ற நான்காவது மீனவர் வாழ்வுரிமை மாநாட்டிலும்,
- 2015 நவம்பர் 18 அன்று இராமேஸ்வரம் இராமகிருஷ்ணாபுரத்தில் நடந்த மீனவர் வாழ்வுரிமை மாநாட்டிலும் முக்கிய பங்காற்றியவர்.
- 2009ஆம் ஆண்டு மீனவர் அமைப்புகளின் துணையோடு மக்கள் கண்காணிப்பகத்தின் முன்முயற்சியில் தங்கச்சிமடத்தில் நடத்தப்பட்ட பொதுவிசாரணையை முன்நின்று நடத்தியவர்.

## பேச்சுவார்த்தை

மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுக்கான இந்திய-இலங்கை மீனவர் தலைவர்களின் பலக்கட்ட பேச்சுவார்த்தையிலும் இந்திய மீனவர் பிரதிநிதியாய் பங்கேற்றவர்.

இருதரப்பு அரசு பிரதிநிதிகளிடமும் மீனவர் பிரச்சனைக்காக வாதிட்டவர்.

சர்வதேச அளவிலும், இந்திய-இலங்கை தூதரக அளவிலும், தனக்கிருந்த தொடர்புகளை முழுக்க, முழுக்க மக்களுக்காகவே பயன்படுத்தினார்.

பல்வேறு விருதுகளையும் பெற்றவர்.

## இலக்கோடும் / அர்ப்பணிப்போடும் செயல்பட்டவர்

- மீனவர்களின் நலன்களுக்காகவே தனது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட திரு.அருளானந்தம் அவர்கள் 2021 அக்டோபர் 10ஆம் தேதி நம்மை விட்டு மறைந்தார். அவரது இழப்பை எப்படி ஈடுக்கட்ட போகிறோம்?

- வாழ்வாதாரம் தேடி கடலுக்குப் போகும் நம் மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதையும், கொலை செய்யப்படுவதையும் ஒருசமூகம் நிச்சயம் ஏற்காது. இதற்கான நிரந்தர தீர்வை காண்பதற்காகவே பெரும் இலக்கோடு செயல்பட்ட திரு.அருளானந்தம் அவர்களின் கொள்கைகளைத் தூக்கி பிடிப்போம்

- மீனவர்கள் மத்தியில் பிரிவினை பேதமற்ற ஒற்றுமைச் சிந்தனையை வளர்த்து, மீனவர்களின் உரிமைகள் தடையின்றி கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்ற தீவுக்கவியின் கனவை நாம் நனவாக்குவோம்.!

******

**என் பணி முற்றிலும் மீனவர்களுக்கே**
**என வாழ்ந்த**
**எங்கள் தீவுக்கவிக்கு**
**வீரவணக்கம்!!**



செ.கு.எண்:**72** நாள்:**10.10.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்**

**இரங்கல் செய்தி**

தேசிய பாரம்பரிய மீனவர் சங்கத்தின் தலைவர் 'தீவுக்கவி' அருளானந்தம் அவர்களின் திடீர் மறைவை அறிந்து பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பனைச் சேர்ந்த திரு. அருளானந்தம் அவர்கள் அரைநூற்றாண்டாக இந்திய - இலங்கை மீனவர்களின் வாழ்வுரிமைப் போராளியாகக் களத்தில் முன்னின்ற சிறந்த செயற்பாட்டாளரும் கவிஞரும் ஆவார். 'இந்திய - இலங்கை அப்பாவி மீனவர்கள் விடுதலைக் கூட்டணி' யின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி, வாழ்வாதாரத்திற்கு உயிரைப் பணயம் வைத்துக் கடலில் இறங்கும் மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படும்போதும் தாக்குதலுக்குள்ளாகும்போதும் அவர்களுக்குப் பக்கபலமாகவும் சட்டத்துணையாகவும் இருந்தவர். அரசுகளுடனான பேச்சுவார்த்தைகளில் மீனவர்களின் பிரதிநிதியாகப் பங்கேற்று அவர்களின் விடுதலைக்காகவும் உரிமைகளுக்காகவும் உயிருக்காகவும் முக்கியப் பங்காற்றியவர்.

மீனவர்களுக்கு, குறிப்பாக தினக்கூலி அடிப்படையில் மீன்பிடிக்கச் செல்வோருக்கும் - மீனவர்கள் கைது செய்யப்படும்போது அவர்களின் விடுதலைக்கும் போராடியுள்ளார் என்பதும் அவரது மனிதநேயத்தின் அகன்ற சிந்தனைக்குச் சான்றாக அமைகிறது.

மீனவ சமூகத்தினரை மீளாத்துயரில் ஆழ்த்திச் சென்றுள்ள அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை- 9

# அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

226, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. தொலைபேசி எண் : 2813 2266, 2813 0787

"மக்களால் நான், மக்களுக்காகவே நான்"
- புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா

**தலைமைக் கழகச் செய்தி வெளியீடு**

தேதி : 11.10.2021

| கழக ஒருங்கிணைப்பாளர்<br>தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர்<br>**திரு. ஓ. பன்னீர்செல்வம்,** | கழக இணை ஒருங்கிணைப்பாளர்<br>தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர்<br>**திரு. எடப்பாடி K. பழனிசாமி** |
|---|---|

**ஆகியோரின் இரங்கல் செய்தி**

தேசிய பாரம்பரிய மீனவர் சங்கத்தின் தலைவரும், இராமேஸ்வரம் மீனவர்களின் பாதுகாவலர் என்று மதிக்கப்படுபவருமான திரு. பி. அருளானந்தம் அவர்கள் மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றோம்.

திரு. அருளானந்தம் அவர்கள், இந்திய–இலங்கை அப்பாவி மீனவர்கள் விடுதலைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி, தங்கள் வாழ்வாதாரத்திற்காக உயிரைப் பணயம் வைத்து கடலில் இறங்கும் மீனவர்கள் சிறைபிடிக்கப்படும் போதும், தாக்குதலுக்கு உள்ளாகும்போதும், அவர்களுக்கு பக்கபலமாகவும், சட்டத் துணையாகவும் அரும்பணி ஆற்றி உள்ளார். மேலும், அரசுகளுடனான பேச்சுவார்த்தைகளில், மீனவர்களின் பிரதிநிதியாகப் பங்கேற்று, அவர்களின் விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் பாடுபட்டவர். தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கும் மேலாக, மீனவர்களின் நல்வாழ்வு ஒன்றையே தனது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு உழைத்தவர்.

அன்புச் சகோதரர் திரு. அருளானந்தம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மீனவ சமுதாயத்தினருக்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

| | |
|---|---|
| **ஓ. பன்னீர்செல்வம்**<br>கழக ஒருங்கிணைப்பாளர்<br>தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் | **எடப்பாடி K. பழனிசாமி**<br>கழக இணை ஒருங்கிணைப்பாளர்<br>தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் |



**அருளானந்தம் மறைவு வைகோ இரங்கல்**

எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய நண்பர், இராமே
மீனவர்களின் பாதுகாவலர் அருளானந்தம் அவர்கள் இயற்கை எ
அறிந்து வருந்துகின்றேன்.

எண்பதுகளின் தொடக்கத்தில், இலங்கைக் கடற்படையி
ராமேஸ்வரம் மீனவர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தி
எதிர்த்துக் களம் புகுந்தார்.தீவு மீனவர் சங்கத்தைத் தொடங்கினார்
தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கும் மேலாக மீனவர்களின் பாதுகாப்
நல்வாழ்வு ஒன்றையே தன் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு
தற்போது தேசிய பாரம்பரிய மீனவர் சங்கத்தின் தலைவராக இரு

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்
யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் குற்றக் கூண்டில் நிறுத்திய போதெ
அங்கே சென்று அவர்களுக்காக வழக்கு உரைஞர்களை வைத்து
னார். அதேபோல, ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட இ
மீனவர்களுக்கும் வழக்கு உரைஞர்களை ஏற்பாடு செய்து வாதாடி
அவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்ப உதவியாக இருந்தார்.

மீனவர் பிரச்சினைகள் குறித்து அவ்வப்போது என்னுடன்
அலைபேசியில் தொடர்பு கொண்டு களநிலவரங்களை என் கவன
கொண்டு வந்தார். நானும் அவருடன் தொடர்ந்து தொடர்பில் இரு

தேசிய நிரபராதி மீனவர் கூட்டமைப்பு ஏற்படுத்தினார்.

ராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை நீதிமன்ற
தண்டனை விதித்த போது அதை எதிர்த்துக் கடுமையாகப்
போராடினார்.தமிழக முதல்வருடன் தொடர்பு கொண்டு அரசுத்தர
உரைஞர்களை ஏற்பாடு செய்து அழைத்துச் சென்று வாதாடி, விடு
பெரும் பங்கு வகித்தார்.

ராமேஸ்வரத்தில் மறுமலர்ச்சி திமுக கழகம் நடத்திய
பாதுகாப்பு அறப் போராட்டங்களில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றி
நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதில் உதவியாக இருந்தார்.

**அவரது மறைவு, மீனவ சமுதாயத்திற்குப் பேரிழப்பு.**

**மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்**
**இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

அவரது குடும்பத்தினர், மீனவ சமுதாயத்தினரின் வேதனையில்
பங்கேற்கின்றேன்.

**மதிமுக பொதுச்செயலாளர் வைகோ**

.NAVASKANI
MEMBER OF PARLIAMENT
(LOK SABHA)
iathapuram Constituency - Tamil Nadu

सत्यमेव जयते

Member:
Standing Committee on He
Consultative Committee - I
Tamil Nadu Waqf Board

Parliament Party Whip - In
State Vice President - IU

நாள் : 10.10.2021

திரு அருளானந்தம் மறைவு

இரங்கல் செய்தி

ராமேஸ்வரம் மீனவர்களின் அரணாக திகழ்ந்த திரு. அருளானந்தம் அவர்கள் மறைவெய்திய செய்தி பெரும் வருத்தமளிக்கிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மீனவர்களின் உரிமைகளுக்காக நின்று போராடியவர்.

இந்திய இலங்கை மீனவர் பேச்சுவார்த்தை குழு தலைவராகவும், தேசிய பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளராகவும் இந்திய இலங்கை நிரபராதி மீனவர் மீட்பு சங்க நிறுவன தலைவராகவும் பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டு மீனவர்களின் நலம் காத்தவர்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்த போதெல்லாம் அவர்களுக்கான சட்ட போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்.

தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கும் மேலாக மீனவர்களின் பாதுகாப்பான நல்வாழ்விற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

அன்னாரது இழப்பு மீனவச் சமுதாயத்திற்கு பேரிழப்பு.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், சங்கத்தினர் உள்ளிட்ட மீனவச் சொந்தங்கள் அனைவருக்கும் என்னுடை ஆழ்ந்த இரங்கல்கலையும், அனுதாபங்களையும்

கே நவாஸ்கனி
இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்
மாநில துணைத் தலைவர்- இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

Delhi : 134, South Avenue, New Delhi - 110 001, Tel. : 011-23746382 | Email: navaskani.n
ai Office : No. 199, Hariyan Street, C. Pallavaram, Chennai - 600 043, Tamil Nadu | Email: r
uency Office: No. 1/2061-B, 9th Street, Nehru Nagar, Ramanathapuram - 623 503, Tamil Na

அலைபேசி 94432 30606

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**கே.எஸ்.அழகிரி**
தலைவர்

நாள் : *11.10.2021*

## இரங்கல் செய்தி

மீனவர்களின் உரிமைகளுக்காக ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக போராடிய இராமநாதபுரம் மாவட்டம், பாம்பனைச் சேர்ந்த திரு. அருளானந்தம் அவர்கள் மறைவு செய்தி அறிந்து மிகுந்த வருத்தமும், துயரமும் அடைந்தேன்.

இந்திய - இலங்கை மீனவர்கள் விடுதலைக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி, மீனவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களுடைய துன்பங்களை துடைக்கவும் வாழ்நாள் முழுவதும் கடுமையாக போராடியவர். மீனவர்கள் தாக்குதல்களுக்கு உள்ளானபோது, அவர்களது துயரை துடைத்தவர். மீனவர்களின் பிரதிநிதியாக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிமைகளை மீட்டெடுத்தவர்.

திரு. அருளானந்தம் அவர்களின் மறைவு மீனவ சமுதாயத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மீனவ சமுதாயத்தினருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கே.எஸ். அழகிரி)

## நிரபராதி மீனவர்களின் உரிமைப் போராளிக்கு

## வீரவணக்கம்!

பாம்பனில் 05.11.2021 அன்று தீவுக்கவி **யு. அருளானந்தம்** அவர்களுக்கு நடந்த நினைவுக் கூடுகையில் மீனவர் உரிமைக் கூட்டமைப்பு, மக்கள் கண்காணிப்பகம் இணைந்து வெளியிட்டது.




**மக்கள் கண்காணிப்பகம்**

32, பெசன்ட் ரோடு,
சொக்கிகுளம், மதுரை - 625 002
+ 91 452 2539520

**மீனவர் உரிமைக் கூட்டமைப்பு**

1/825-4 அய்யப்பன் நகர்
கிருஷ்ணா நகர், மதுரை - 625 014
+ 91 99943 68521